# BENEVOLENT IAS ACADEMY

1626A, Sri Vinayaga Complex, Avinashi Road, Hope College,
Peelamedu (PO), Coimbatore – 641004.
Cell: +91-9787731607/9787701067.
Web: www.benevolentacademy.com E-Mail:benevolentacademy@gmail.com

# DAILY IMPORTANT CURRENT AFFAIRS

## TNPSC Group I, II/IIA & IV

DATE: 11.04.202

### 1) பாரதிய பாஷா விருது




- இந்தியாவின் பெருமைக்குரிய இலக்கிய விருதுகளில் ஒன்றான **பாரதிய பாஷா 2025** - க்கான விருது, எழுத்தாளர் **S. ராமகிருஷ்ணனுக்கு** வழங்கப்படுகிறது.
- இவர் 2018-ல் **"சஞ்சாரம்"** என்னும் நாவலுக்கு **சாகித்ய அகாடமி விருது** பெற்றிருந்தார்.

### 2) PM போஷன் சக்தி நிர்மான்

- **மத்திய அரசு வழங்கும்** PM போஷன் சக்தி நிர்மான் என்பது பால்வாடி முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான இலவச சத்துணவு திட்டம் ஆகும்.
- குழந்தைகளின் வருகையை அதிகரிப்பது மற்றும் ஊட்டச்சத்து வலிமையை மேம்படுத்துவது போன்றவை இந்த திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.




### 3) சர்வதேச மகப்பேறு இறப்பு - இந்தியா

- **சர்வதேச மகப்பேறு இறப்புகளில் இந்தியா இரண்டாம் இடம்** வகிக்கிறது என்று ஐநா குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.
- இதில் முதலிடம் நைஜீரியா பெற்றுள்ளது.

**இந்தியா:**

- 1990 முதல் 2023 வரை 86% மகப்பேறு இறப்பு குறைக்கப்பட்டுள்ளது.
- 2023 ல் 19,000 மகப்பேறு இறப்புகள் பதிவாகியுள்ளன மற்றும் உலக அளவில் மகப்பேறு இறப்பு இந்தியாவில் 7.2% ஆகும்.

### 4) IIM அகமதாபாத் (IIMA) புதிய கிளை - துபாய்

IIM அகமதாபாத் (IIMA) மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் UAE - ன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி IIM அகமதாபாத்தின் கிளை துபாயில் புதிதாக திறக்கப்பட உள்ளது. இது இரண்டு கட்டங்களாக நிறுவப்படும் மற்றும் 2029 முதல் செயல்படும் என்று கூறப்பட்டுள்ளது.

### 5) Three Gorges Antarctic Eye

சீனா - அண்டார்டிகாவில் ஜாங்ஷான் நிலையத்தில் 3.2 மீட்டர் துளை ரேடியோ/மில்லி மீட்டர் தொலைநோக்கியை அறிமுகப்படுத்தியுள்ளது.

### 6) ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தம் 54 வது நாடு - வங்காளதேசம்

- சந்திரனை ஆராய்வதற்கான ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தத்தில் **பங்களாதேஷ் 54-வது புதிய உறுப்பினராக** இணைந்துள்ளது.
- 2025 முதலீட்டாளர் உச்சி மாநாடு – டாக்கா, வங்காளதேசத்தில் நடைபெற்ற போது இந்த ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தத்தில் வங்காளதேசம் கையெழுத்திட்டது.
- 2020ல் அமெரிக்கா மற்றும் ஏழு நாடுகள் இந்த ஒப்பந்தங்களை நிறுவியது. 2023 - இந்தியா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இது நிலையான விண்வெளி நடவடிக்கைகான ஒப்பந்தம் ஆகும்.

  **ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கை** என்பது பல்வேறு நாடுகளுக்கு இடையேயான ஒரு முறையான ஒப்பந்தமாகும், இது விண்வெளியில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஆராய்ச்சி நடவடிக்கையும் முழு மனித இனத்திற்கும் பயனளிக்கும் மற்றும் பிற நாடுகளின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்காது என்பதை உறுதி செய்கிறது.

### 7) டையர் ஓநாய்கள்

- பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் அழிந்த ஓநாயினமான டையர் ஓநாய்கள் “கலோசல் பயோ சயின்ஸ்” நிறுவனத்தின் அமெரிக்க விஞ்ஞானிகளால் மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டுள்ளது

- சாம்பல் ஓநாயின் மரபணுக்களில் பல்வேறு மாற்றங்கள் செய்து இந்த டையர் ஓநாய்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 8) இந்திரா 2025

- இந்தியா மற்றும் ரஷ்யாவுக்கு இடையேயான கூட்டு கடற்படை போர் பயிற்சியே இந்திரா 2025 ஆகும்.
- இது நடைபெற்ற இடம் வங்காள விரிகுடா.
- 2003 முதல் நடைபெறுகிறது.

## 9) IMPORTANT DAYS

- National safe motherhood day - April 11
- World Parkinson's day April 11